யாகத் தேவைப்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட நல்ல வாய்பான பகுதிகளில் மூங்கில் வளர்க்க வேண்டுமென்று 1980ஆம் ஆண்டிலேயே வனத்துறைக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது ; ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. கல்லன் : தலைவரவர்களே, நீலகிரியில் இருந்து மற்ற மாவட்டங்களுக்கு மூங்கில் கொண்டு செல்லுவதனால், இங்கே உள்ள இயற்கை வன வளங்கள் ஏற்கெனவே அழிந்து போய், மழை குறைந்து வருகிறது, அதனால் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இதைத் தடுக்க அரசு முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூங்கில் மரம் என்பது ஒரு குறிப்பிட்ட கால வளர்ச்சிக்குப் பிறகு வெட்டப்பட்டாக வேண்டும். இல்லையானால் அது தானாகவே தீப்பிடித்து எரிந்து, மற்ற காடுகளையும் அழித்துவிடும். மழை குறைகிறது என்பது அடர்ந்த காடுகளை அழிப்பதனாலேதான் மழை குறைந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்துள்ள நீலகிரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட மரங்களைத் தனியார்கள் வெட்டுகிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடிக்க அரசுக்கு உதவியாக இருந்தால், மாண்புமிகு உறுப்பினருக்கு வனத்துறை நன்றி தெரிவிக்கும்.

குமரி முனையின் அருகிலுள்ள வட்டக்கோட்டை.

*வினா எண். 340— திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி முனையின் அருகில் உள்ள பழம்பெரும் நாகரீகச் சிறப்பை எடுத்துக்காட்டும் வட்டக்கோட்டை இப்போது மாநில அரசின் கையிலுள்ளதா ? அல்லது மத்திய அரசின் கையில் உள்ளதா ?

(ஆ) மத்திய அரசின் கையில் உள்ளது என்றால் அதனை மாநில அரசு எடுத்து சுற்றுலா வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) 1979ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 6ஆம் நாள் பிறப்பிக்கப்பட்ட அரசாணையின்படி மத்திய அரசின் தொல்பொருள் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது.

(ஆ) இதனை மீண்டும் திரும்பிப் பெற மாநில அரசு முடிவெடுத்துள்ளது.

1981 மார்ச் 3]

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, முக்கூடலும் கூடி முழங்கும் குமரி முனைக்குத் தென்கிழக்கே, 28 அடி உயரமுள்ள மதில்களைக் கொண்ட $3\frac{3}{4}$ ஏக்கர் பரப்புடையது இந்த வட்டக்கோட்டை. 12-ம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட இந்த கோட்டையை 1635 ஆம் ஆண்டு திருமலைநாயக்கன் படையும், 1725 ஆம் ஆண்டு அழகப்ப முதலியார் படையும் அழித்ததாக இலக்கியச் சான்றுகள் உள்ளன. 18 ஆம் நூற்றாண்டில் சேரர் வழிவந்த வேணாட்டு மன்னர் மார்த்தாண்டவர்மன் அவரது தளபதி டிலெனாயின் ஆலோசனைப்படி புதுப்பித்து ஒரு பேரரணாக அமைத்தார். ஆனால் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த வட்டக்கோட்டை இன்று பழுதடைந்து உள்ளது. அதனால் 20ம் நூற்றாண்டில் உலகத்தமிழ்மாநாடு கண்ட உத்தமத் தமிழ் மன்னன் புரட்சித் தலைவரின் தளபதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வட்டகோட்டையைப் புதுப்பித்து சிறப்பான எழில் பொங்கும் சுற்றுலா இடமாக்க மத்திய அரசை வற்புறுத்தி மாநில அரசு பெற்றுத் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வட்டக்கோட்டை என்பது ஒரு சிறிய அளவிலே அமைந்திருக்கிற கோட்டையாக இருந்தாலும் அது கடற்கரை ஓரத்திலே, கடற்கரைக்கு உள்ளே அது நீட்டப்பட்டு இருக்கிற அற்புதமாகக் கட்டப்பட்டிருக்கிற ஒரு கோட்டையாகும். மத்திய அரசினுடைய தொல்பொருள் ஆய்வுத் துறை இது பாதுகாக்கவேண்டிய இடம் என்று அறிவிக்கை செய்ததை ஒட்டி 10 ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை கடிதப் போக்குவரத்திலே இருந்து இறுதியாக 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலே மத்திய அரசுக்குத் தரப்பட்டிருக்கிறது. இதற்கிடையிலே சுற்றுலாத் துறை இந்த இடத்தை ஒரு அற்புதமான சுற்றுலாத்தலமாக, அதனுடைய தொல்பொருள் சிறப்பு பாதிக்கப்படாத சூழ்நிலையிலே வைக்க முடியும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறது. அதையும் மீறித்தான் அது மாற்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அதை ஒரு அற்புதமான உலக சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையில் கன்னியா குமரியின் அருகில் இருக்கிற காரணத்தினாலே, கேரளத்திலே இருக்கிற கோவளத்தைப்போல அற்புதமான இயற்கைச் சூழ்நிலையோடு அமைத்து, அந்த வட்டக்கோட்டைப் பகுதியை உலகச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற தலமாக மாற்றவேண்டும் என்ற கருத்தில்தான் மீண்டும் அதை மத்திய அரசிடமிருந்து அதைக் திரும்பத் தருவதற்கான அல்லது திரும்பப் பெருவதற்கான முயற்சிகளை மாநில அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோட்டையின் ஒரு பக்கம் கடலும் மறு பக்கம் அகழியும் உள்ளன. கடல் வழியே வரும் பகைவர்களைத்

தடுத்துநிறுத்தும் நோக்குடன் கோட்டை கொத்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பீரங்கியை மேலே கொண்டுபோய் கடல் வழியாக வரும் பகைவர்களைச் சுடுவதற்கு கல்லிலே சாரம் கட்டுப்பட்டுள்ளது. இன்டர்நேஷனல் டூரிஸ்ட் சென்டர் ஆக்கப்பட்டுள்ள கன்னியாகுமரியில் இருந்து சுற்றுலாப் பயணிகள் முக்கடலும் முத்தமிட்டு மகிழும் இயற்கை எழிலைப் பருகிக்கொண்டே இக் கோட்டை வரை இனிதே நடந்து வர நீண்டதொரு கடற்கரைச்சாலையை அமைக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, முதலிலே அந்த வட்டக்கோட்டை நம்மிடத்திலே திரும்பி வரட்டும். அதற்குப் பிறகு பாதை அமைப்பது பற்றி பரிசீலிக்கலாம்.

(முற்பகல் 9.20)

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று மத்திய அரசின் பராமரிப்பில் இருக்கிற தொல்பொருள் நாகரீகச் சின்னங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறதா? இல்லையென்றால் அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் ; மாண்புகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று மத்திய அரசின் தொல் பொருள் ஆய்வுத் துறையின் பொறுப்பிலே இருக்கின்ற பல தொல்பொருள் இடங்கள் நல்ல முறையிலே பாதுகாக்கப்படுகின்ற இடங்களாக இருக்கின்றன. சில இடங்களுக்கு அதிகமாகப் பணம் அவர்கள் வழங்குவதால் பாதுகாப்பு நல்ல முறையில் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. பணம் குறைவாக வழங்கும் சூழ்நிலை இருந்தால் பாதுகாப்பும் குறைவான சூழ்நிலையில் இருப்பதும் இருக்கிறது. ஆகவே, எந்த அளவிற்கு அவர்கள் பாதுகாப்பதற்கு முறைப்படுத்தி, முன்னுரிமை கொடுத்து வருகிறார்களோ அந்த வரிசையில் அவைகள் வருகின்றன. குறிப்பாக தஞ்சை பெரிய கோவிலை மிக நல்ல அளவிலே பாதுகாக்கிறார்கள். அதைப்போல, வேறு சில இடங்கள் இடிந்து அழிந்து போகிற நிலையில் விட்டு விலக்கப்பட்டும் இருக்கின்றன. குறிப்பாக மாமல்லபுரத்தின் வளர்ச்சி குறைந்த அளவில் இருக்கிறது. மத்திய அரசுக்கும் இது பற்றி தெரிவித்து இருக்கிறோம். தொல்பொருள் ஆய்வுத்துறையையும் கேட்டுக்கொண் கொண்டு இருக்கிறோம். ஆகவே, பொதுவாக அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு, முன்னுரிமை தந்து பணம் செலவழிப்பதைப் பொறுத்து நல்ல முறையில் பாதுகாக்கப்படுவது இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1981 மார்ச் 31]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த வட்டக்கோட்டையில் முத்துக்கள் இருந்ததாகவும், அங்கே இப்போதும் முத்துக்கள் இருப்பதாகவும், தகுந்த முறையில் பாதுகாக்கப்படவில்லை என்றும், அதேபோன்று அதற்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய உதயகிரியில் பீரங்கிகளும் குண்டுகளும் இருந்தவை கடத்திக்கொண்டு போகப்படுகின்றன என்றும் அரசுக்குத் தகவல் ஏதேனும் வந்துள்ளதா? இப்படி பீரங்கிகளும், குண்டுகளும், முத்துக்களும் கடத்திப்போவதைத் தடுத்து, அவற்றைப் பாதுகாக்க தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட்டக்கோட்டையிலே முத்துக்கள் இருந்தனவா அல்லது வட்டக்கோட்டைக்கு அருகாமையில் இருக்கும் கடலில் முத்துக்கள் இருக்கின்றனவா எதைப் பற்றிக் கூறுகிறார்கள் என்று தெரியவில்லை. வட்டக்கோட்டையில் முத்துக்களைப் புதைத்து வைத்து இருந்தால், புதை பொருள் ஆய்வுத் துறை யிடத்தில் சொல்லித்தான் தோண்டிப் பார்க்கவேண்டும்.

மேச்சேரியில் செம்மறி ஆடுகள் இன விருத்தி.

*வினா எண் 341 : திரு. செ. செம்மலை : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேச்சேரி செம்மறி ஆடுகளின் உற்பத்தி மற்றும் இன விருத்தியை அதிகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மேய்ச்சேரி ஆட்டு ஆராய்ச்சிப் பண்ணையில் மேய்ச்சேரி இன செம்மறி ஆடுகளைத்தவிர வேறு இன ஆடுகளைப் பற்றிய ஆராய்ச்சியும் நடைபெற்று வருகிறதா? அந்த ஆராய்ச்சியின் பலன் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆராய்ச்சி நிலையத்தில் மேய்ச்சேரி மற்றும் தார்செட் இன செம்மறி ஆடுகள் இனக்கலப்பு செய்து புதிய தொரு இறைச்சி இனச் செம்மறி ஆடுகளை உருவாக்குவது ஒரு நோக்கமாகும். அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, மேய்ச்சேரி ஆடு பிரசித்தி பெற்ற வகையைச் சேர்ந்தது. அரசு ஆடு மானியம் கொடுக்கிற பணத்தில், இந்த மேய்ச்சேரி ஆடுகளை வாங்கி, விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா